# தராவிஹ் - 14: (ரக்அத் 1 முதல் 4)

## ஸூரா - 21, அல்அன்பியா; வசனம்: 51 - 112; பிரிவு: 5 - 7

1. இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் நேர்வழியைக் கொடுத்தான். அவரைப் பற்றி நன்கு அறிந்திருந்தான். (ஸூரா - அல்அன்பியா; பிரிவு: 5)

2. இப்ராஹீம் (அலை) தம் தந்தையிடமும், அவர் சமூகத்தாரிடமும் "நீங்கள் வழிபடும் இந்த சிலைகள் என்ன?" என்று கேட்டார். அதற்கு, "எங்கள் மூதாதையர்கள் இவற்றை வணங்கிக் கொண்டிருந்ததை நாங்கள் கண்டோம்" என்று அவர்கள் கூறினார்கள். (ஸூரா - அல்அன்பியா; பிரிவு: 5)

3. அதற்கு அவர், "நிச்சயமாக நீங்களும், உங்களுடைய மூதாதையரும் பகிரங்கமான வழிகேட்டில்தான் இருந்து வருகிறீர்கள்" என்று கூறினார். (ஸூரா - அல்அன்பியா; பிரிவு: 5)

4. "அல்லாஹ் வானங்களையும், பூமியையும் படைத்தவன். அவனே உங்களுக்கும், எனக்கும் இறைவனாவான். இன்னும் நீங்கள் திரும்பிச் சென்ற பின்னர், அல்லாஹ்வின் மீது சத்தியமாக உங்கள் சிலைகளுக்கு ஒரு தந்திரம் செய்வேன்" என்றும் இப்ராஹீம் (அலை) கூறினார்கள். (ஸூரா - அல்அன்பியா; பிரிவு: 5)

5. அவ்வாறே, பெரிய சிலையைத் தவிர மற்ற அனைத்து சிலைகளையும் இப்ராஹீம் (அலை) உடைத்தார்கள். (ஸூரா - அல்அன்பியா; பிரிவு: 5)

6. அதைக் கண்ட ஊர்மக்கள், இது இப்ராஹீம் (அலை) அவர்களின் சதியாக இருக்கும் என நினைத்து, அவரை

அழைத்து தண்டனை கொடுக்க எண்ணினார்கள். (ஸூரா - அல்அன்பியா; பிரிவு: 5)

7. இது குறித்து இப்ராஹீம் (அலை) அவர்களிடம் கேட்ட போது அவர், “இதோ பெரிய சிலையொன்று உடைபடாமல் இருக்கிறதே, அதனிடம் கேளுங்கள்” என்று பதில் சொன்னார்கள். (ஸூரா - அல்அன்பியா; பிரிவு: 5)

8. பின்னர் "இந்த சிலைகள் பேசாது என்பதைத்தான் நீர் நிச்சயமாக அறிவீரே!" என்றனர். அதற்கு இப்ராஹீம் (அலை), "அப்படியானால், அல்லாஹ்வை தவிர்த்து எதற்காக இந்த சிலைகளை வணங்குகிறீர்கள். நீங்கள் இதை புரிந்து கொள்ளமாட்டீர்களா?" என்றார்கள். (ஸூரா - அல்அன்பியா; பிரிவு: 5)

9. “இப்ராஹீம் (அலை) அவர்களை உயிருடன் நெருப்பில் போட்டு தங்களது கடவுளுக்காக பலி வாங்குங்கள்” என்று கூறினர். (ஸூரா - அல்அன்பியா; பிரிவு: 5)

10. அவர்கள் இப்ராஹீம் (அலை) அவர்களை நெருப்புக் குண்டத்தில் எறிந்த போது, அல்லாஹ், “நெருப்பே! நீ இப்ராஹீமுக்குக் குளிர்ச்சியாகவும், இதமாகவும் ஆகிவிடு” என்று கட்டளையிட்டான். இவ்வாறு அம்மக்கள் நஷ்டவாளிகளாக ஆனார்கள். (ஸூரா - அல்அன்பியா; பிரிவு: 5)

11. அகிலத்தாருக்கு வளமிக்கதாக நாம் ஆக்கிய பூமியில் இப்ராஹீம் (அலை) அவர்களையும், அவரது உறவினர் லூத் (அலை) அவர்களையும் அனுப்பி வைத்தோம். (ஸூரா - அல்அன்பியா; பிரிவு: 5)

12. இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு இஸ்ஹாக்கையும், யாஃகூப்பையும் பரிசளித்தோம். அவர்கள் அனைவரையும்

நல்லோராகவும் ஆக்கினோம். (ஸூரா - அல்அன்பியா; பிரிவு: 5)

13. பல நபிமார்கள் மற்றும் அவர்களுக்கு வழங்கப்பட்ட அல்லாஹ்வின் அருட்கொடைகள் பற்றிய விவரங்கள்:
    a. லூத் (அலை) அவர்களுக்கு ஞானத்தையும், கல்வியையும் கொடுத்தான். (ஸூரா - அல்அன்பியா; பிரிவு: 6)
    b. இவர்களுக்கு முன்பாக, நூஹ் (அலை) அல்லாஹ்விடம் பிரார்தனை செய்தார்கள். பெரும் வெள்ளப் பிரளயத்திலிருந்து அவர்கள் மற்றும் அவர்கள் குடும்பம் காப்பாற்றப்பட்டது. (ஸூரா - அல்அன்பியா; பிரிவு: 6)
    c. அல்லாஹ்வின் புகழ் பாடுகின்ற தாவூத் (அலை) அவர்களுக்கு அல்லாஹ், மலைகளையும், பறவைகளையும் வசப்படுத்திக் கொடுத்தான். மேலும், போரின் போது பாதுகாக்கின்ற கவசங்கள் செய்யும் கலையை அல்லாஹ்விடமிருந்து தாவூத் (அலை) கற்றிருந்தார்கள். (ஸூரா - அல்அன்பியா; பிரிவு: 6)
    d. சுலைமான் (அலை) அவர்களுக்கு ஞானத்தையும், கல்வியையும் அவரது தந்தை தாவூத் (அலை) அவர்களுக்கு கொடுத்தது போல வழங்கியிருந்தான். (ஸூரா - அல்அன்பியா; பிரிவு: 6)
    e. அய்யூப் (அலை) அவர்கள் கடுமையான நோயினால் துன்பத்திற்கு ஆளானார்கள். அல்லாஹ் அவர்களின் நோயை குணப்படுத்தி, அவரது குடும்பத்தை மீண்டும் நல்ல நிலைமைக்கு கொண்டு வந்தான். (ஸூரா - அல்அன்பியா; பிரிவு: 6)
    f. இஸ்மாயில் (அலை), இத்ரீஸ் (அலை), துல்கி∴ப்ல் (அலை) ஆகிய மூவரும் பொறுமைசாலிகள். அவர்களுக்கும் அல்லாஹ் தனது அருளை வழங்கினான். (ஸூரா - அல்அன்பியா; பிரிவு: 6)

g. துன்நூன் (என்ற) யூனுஸ் (அலை) அவர்கள், தம் சமூகத்தவரை விட்டும் கோபமாக வெளியேறிய போது, தம்மை அல்லாஹ் நெருக்கடியில் ஆக்கமாட்டான் என்று எண்ணிக் கொண்டார். ஆனால், அவரை ஒரு திமிங்கலம் விழுங்கிவிட்டது. அவர் அதன் வயிற்றில் இருந்தபோது, “உன்னைத் தவிர வணக்கத்திற்குரிய இறைவன் யாருமில்லை. நீ மிகவும் தூய்மையானவன். நிச்சயமாக நான் அநியாயக்காரர்களில் ஒருவனாகி விட்டேன்” என்று பிரார்த்தித்தார். அவருடைய பிரார்த்தனை ஏற்கப்பட்டு, அவரது துன்பம் நீங்கியது. (ஸூரா - அல்அன்பியா; பிரிவு: 6)

h. ஜகரிய்யா (அலை) தம் இறைவனிடம் தனக்கு ஒரு நல்ல குழந்தை வேண்டும் என வேண்டியபோது, அல்லாஹ் அவருடைய பிரார்த்தனையை ஏற்றுக் கொண்டு, அவருடைய மனைவியின் மலட்டுத் தனத்தை நீக்கி சுகப்படுத்தி, அவருக்கு யஹ்யாவைக் கொடுத்தான். (ஸூரா - அல்அன்பியா; பிரிவு: 6)

i. தம் கற்பைக் காத்துக் கொண்ட மர்யம் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் தன் ஆன்மாவிலிருந்து ஜிப்ரயீல் (அலை) மூலம் ஊதி, ஈஸா (அலை) என்ற மகனைக் கொடுத்தான். மர்யம் (அலை) அவர்களையும், அவர் புதல்வரையும் அகிலத்தாருக்கு ஓர் அத்தாட்சியாகவும் ஆக்கினான். (ஸூரா - அல்அன்பியா; பிரிவு: 6)

14. இந்த இறைத்தூதர்களைப் பற்றி சொன்ன பிறகு, அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான்: “இதுதான் உங்களின் ஒரே சமுதாயமாகும்; அல்லாஹ்தான் உங்களுடைய ஒரே இறைவன்”. (ஸூரா - அல்அன்பியா; பிரிவு: 6)

15. நபியே! உம்மை நாம் அகிலத்தாருக்கு அருளாகவே அனுப்பியுள்ளோம். நபியே! “உங்கள் இறைவன் ஒரே இறைவன்தான் என்று எனக்கு வஹி அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, நீங்கள் அவனுக்கு வழிப்பட்டு நடப்பீர்களா?”, என்று கேட்பீராக! (ஸூரா - அல்அன்பியா; பிரிவு: 7)

## தராவிஹ் - 14: (ரக்அத் 5 முதல் 8)

## ஸூரா - 22, அல்ஹஜ்; வசனம்: 1 - 38; பிரிவு: 1 - 5

1. மனிதர்களே! நீங்கள் உங்களுடைய இறைவனை பயந்து கொள்ளுங்கள். கியாமத் நாளின் அதிர்ச்சி மிகவும் பயங்கரமானதாக இருக்கும். (ஸூரா - அல்ஹஜ்; பிரிவு: 1)

2. பால் குடிப்பாட்டிக்கொண்டிருக்கும் ஒவ்வொரு தாயும் தன் குழந்தையை மறந்து விடுவாள். கர்ப்பமாக இருப்பவள், தன் கர்ப்பத்தை ஈன்றுவிடுவாள். மனிதர்கள், போதையில் இருப்பது போல் நீர் காண்பீர். ஆனால் அவர்கள் போதையில் இல்லை. இவ்வாறாக அல்லாஹ்வின் வேதனை மிகக் கடுமையானதாக இருக்கும். (ஸூரா - அல்ஹஜ்; பிரிவு: 1)

3. அல்லாஹ்தான் உண்மையாளன். அவன் இறந்தவர்களை உயிர்ப்பிக்கிறான். அவன் எல்லாவற்றின் மீதும் ஆற்றலுடையவன். (ஸூரா - அல்ஹஜ்; பிரிவு: 1)

4. பெரும்பாலான மக்களும், வானங்களில் உள்ளவர்களும், பூமியில் உள்ளவர்களும், மற்றும் மரங்கள், மலைகள், விலங்குகள், நட்சத்திரங்கள், சூரியன், சந்திரன் ஆகிய அனைத்தும் அல்லாஹ்விற்கு ஸஜ்தா செய்கின்றன. (ஸஜ்தா - 6) (ஸூரா - அல்ஹஜ்; பிரிவு: 2)

5. நிராகரிப்போருக்கு கடும் வேதனை காத்திருக்கிறது, அவர்களுக்கு நெருப்பினால் ஆடை தயார் படுத்தப்படும். கொதி நீரை தலை மேல் ஊற்றப்படும், அதனால் வெளித்தோல் மட்டும் இன்றி உடம்பிற்குள் உள்ள உறுப்புகள் பொசுக்கப்படும். (ஸூரா - அல்ஹஜ்; பிரிவு: 2)

6. துக்கத்தினால் அவர்கள் அங்கிருந்து வெளியேற முனையும் போதெல்லாம் அதிலேயே திரும்ப அனுப்பப்படுவர். மேலும் “எரிக்கும் வேதனையை சுவையுங்கள்” என்று சொல்லப்படும். (ஸூரா - அல்ஹஜ்; பிரிவு: 2)

7. யார் ஈமான் கொண்டு, நற்செயல்கள் செய்கிறார்களோ அவர்களுக்கு சுவர்க்கமுண்டு. அவற்றுக்கிடையில் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும். தங்கம் மற்றும் மரகதத்தினால் ஆன ஆபரணங்கள் அணிவிக்கப்படும்; அவர்களின் ஆடை பட்டாகும். (ஸூரா - அல்ஹஜ்; பிரிவு: 3)

8. அல்லாஹ், இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு புனித இல்லமான கஃபாவின் இடத்தை அடையாளம் காட்டினான். மேலும் அல்லாஹ் கூறுகிறான்: “நீர் எனக்கு எவரையும் இணைவைக்காதீர்! என்னுடைய இந்த ஆலயத்தை (எதிர் கடிகார திசையில்) சுற்றி வருவோருக்கும், அதில் ருகூஃ, ஸுஜூது செய்து தொழுவோருக்கும், அதைத் தூய்மையாக்கி வைப்பீராக!” (ஸூரா - அல்ஹஜ்; பிரிவு: 4)

9. அல்லாஹ், இப்ராஹீம் (அலை) அவர்களிடம், “இப்ராஹீமே! மக்களிடம் ஹஜ்ஜுக்குக்காக அழைப்பு கொடுப்பீராக! வெகு தொலைவிலிருந்து நடந்தும், ஒட்டகத்தின் மீது சவாரி செய்தும் மக்கள் வருவர்”. (ஸூரா - அல்ஹஜ்; பிரிவு: 4)

10. அல்லாஹ்வின் பெயரைச்சொல்லி கால்நடைகளை குர்பானி கொடுங்கள். அவற்றிலிருந்து நீங்கள் உண்ணுங்கள். மேலும் கஷ்டப்படும் ஏழைகளுக்கும் உண்ணக் கொடுங்கள். (ஸூரா - அல்ஹஜ்; பிரிவு: 4)

11. பின்னர் (முடி, நகங்களை வெட்டி, குளித்து) தங்களின் அழுக்குகளை நீக்கிக் கொள்ள வேண்டும், நேர்ச்சைகளை நிறைவேற்ற வேண்டும். மேலும் தொன்மையான இல்லமாகிய

கஃபாவை தவாஃப் செய்ய வேண்டும். (ஸூரா - அல்ஹஜ்; பிரிவு: 4)

12. இந்த கஃபா மற்றும் அல்லாஹ்வினால் புனிதப்படுத்தப்பட்டவற்றை யார் கண்ணியப்படுத்துகிறாரோ அது, அல்லாஹ்விடத்தில் அவருக்கு சிறப்பானதாக இருக்கும். (ஸூரா - அல்ஹஜ்; பிரிவு: 4)

13. அல்லாஹ் உணவாக்கியுள்ள ஆடு, மாடு, ஒட்டகம் போன்றவற்றை குர்பானி கொடுப்பது நமது கடமையாகும். அதில் நமக்கு நன்மை இருக்கிறது. (ஸூரா - அல்ஹஜ்; பிரிவு: 5)

14. அவற்றின் இறைச்சியோ அல்லது இரத்தமோ அல்லாஹ்வை சென்றடையாது. மாறாக உங்களின் தக்வா - இறையச்சம்தான் அல்லாஹ்விடம் வந்து சேரும். (ஸூரா - அல்ஹஜ்; பிரிவு: 5)

15. அல்லாஹ் உங்களுக்கு நேர்வழி வழங்கியதன் காரணமாக, நீங்கள் அவனை பெருமைப்படுத்துவதற்காக, கால்நடைகளை உங்களுக்கு அவன் வசப்படுத்திக் கொடுத்தான். நபியே! நற்காரியங்கள் செய்பவர்களுக்கு நீர் சுபச்செய்தி சொல்வீராக! (ஸூரா - அல்ஹஜ்; பிரிவு: 5)

## தராவிஹ் - 14: (ரக்அத் 9 முதல் 12)

### ஸூரா - 22, அல்ஹஜ்; வசனம்: 39 - 78; பிரிவு: 6 - 10

1. அல்லாஹ்வுக்காக யார் உதவி செய்கிறாரோ, அவருக்கு நிச்சயமாக அல்லாஹ்வும் உதவி செய்வான். (ஸூரா - அல்ஹஜ்; பிரிவு: 6)

2. அவர்கள் தொழுகையை நிலைநாட்டுபவர்களாகவும், ஜகாத் வழங்குபவர்களாகவும், நல்லதை ஏவி, தீமையை

தடுப்பபவர்களாகவும் இருப்பர். அனைத்து செயல்பாடுகளின் இறுதி முடிவு அல்லாஹ்வின் வசமே உள்ளது. (ஸூரா - அல்ஹஜ்; பிரிவு: 6)

3. (நபியே!) இவர்கள் உம்மைப் பொய்யராக்க முற்பட்டால், அதற்காக கவலைப்படாதீர்! ஏனெனில், இவர்களுக்கு முன்னால் நூஹ், ஆத், ஸமூத், இப்ராஹீம், லூத், மத்யன்வாசிகள், மூஸா ஆகிய நபிமார்களின் கூட்டத்தினர்கள் அவர்களது நபிமார்களை பொய்யர்கள் என்று கூறினர். (ஸூரா - அல்ஹஜ்; பிரிவு: 6)

4. ஆரம்பத்தில் அல்லாஹ் அவர்களுக்கு அவகாசம் வழங்கினான். இறுதியில் அவர்களைப் பிடித்து கொண்டான். அந்தோ! அல்லாஹ்வின் தண்டனை எப்படி இருந்தது தெரியுமா? (ஸூரா - அல்ஹஜ்; பிரிவு: 6)

5. அல்லாஹ்வின் பண்புகள் சில இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன. அவன் சிறந்த கொடையாளன், அனைத்தையும் அறிந்தவன், மிகப் பொறுமையுடன் இருப்பவன், அதிகம் மன்னிப்பு வழங்குபவன், அனைத்தையும் செவியுறுபவன், பார்க்கக் கூடியவன், மிகவும் நம்பிக்கைக்குரியவன், மிக உயர்ந்தவன், மிகச் சிறந்தவன், மகத்தானவன், மனிதர்கள் மீது இரக்கமுள்ளவன் மற்றும் கிருபையாளன். (ஸூரா - அல்ஹஜ்; பிரிவு: 8)

6. நிச்சயமாக அல்லாஹ் மனிதர்கள் மீது மிகுந்த அன்பும், இரக்கமும் உள்ளவனாக இருக்கிறான். அவன்தான் உங்களுக்கு உயிர் கொடுத்தான். பிறகு அவனே உங்களை இறக்கச் செய்வான். பின்னர் மீண்டும் உங்களை உயிர்ப்பிப்பான். ஆனாலும் மனிதன், நன்றி மறந்தவனாக இருக்கிறான். (ஸூரா - அல்ஹஜ்; பிரிவு: 9)

7. அல்லாஹ்வையன்றி அவர்கள் யாரை தெய்வங்களாக அழைக்கிறார்களோ அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்தாலும் ஒரு ஈயைக்கூட அவர்களால் படைக்க முடியாது. ஒரு ஈ அவர்களிடமிருந்து ஒரு பொருளைப் பறித்துச் சென்றால் அதைக் கூட அவர்களால் மீட்கமுடியாது. (ஸூரா - அல்ஹஜ்; பிரிவு: 10)

8. இதில் வணங்குபவர்களும், வணங்கப்படுபவர்களும் மிகவும் பலவீனமானவர்களே. (ஸூரா - அல்ஹஜ்; பிரிவு: 10)

9. ஈமான் கொண்டோர்களே! ருகூஃ செய்யுங்கள், ஸஜ்தா செய்யுங்கள், உங்களது இறைவனை வணங்குங்கள். நன்மை செய்யுங்கள். நீங்கள் வெற்றி பெறுவீர்கள். (ஸஜ்தா - 7) (ஸூரா - அல்ஹஜ்; பிரிவு: 10)

10. நீங்கள் அல்லாஹ்வின் பாதையில் அவனுக்காக போராட வேண்டிய முறைப்படி போராடுங்கள். அவன் உங்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டான். இந்த மார்க்கத்தில் அவன் உங்களுக்கு எந்த சிரமத்தையும் ஏற்படுத்தவில்லை. இது தான் உங்கள் தந்தை இப்ராஹீமின் மார்க்கமாகும். (ஸூரா - அல்ஹஜ்; பிரிவு: 10)

11. தொழுகையை நிறைவேற்றுங்கள், ஜகாத்தை கொடுங்கள், அல்லாஹ்வை பற்றிக்கொள்ளுங்கள். அவனே உங்களுக்கு பாதுகாவலன். அவனே பாதுகாப்பவர்களில் சிறந்தவன், அவனே உதவி செய்பவர்களில் சிறந்தவன். (ஸூரா - அல்ஹஜ்; பிரிவு: 10)

## தராவிஹ் - 14: (ரக்அத் 13 முதல் 16)

## ஸூரா - 23, அல்முஃமினூன்; வசனம்: 1 - 77; பிரிவு:1 - 4

உமர் (ரலி) கூறியதாக உர்வா பின் ஸுபைர் அறிவித்தது, நபி (ஸல்) இந்த ஸூராவின் முதல் 10 வசனங்களை பெற்றபோது கூறியதாவது, "இந்த 10 நற்பண்புகளை கொண்ட முஃமின்கள் சுவர்க்கம் செல்லக் கூடியவர்கள் ஆவர்”.

- நம்பிக்கையுடைய முஃமின்கள் வெற்றியாளர்கள்.
- பயபக்தியுடன் தொழுகையை நிறைவேற்றுபவர்கள்.
- வீண் பேச்சுக்களைத் தவிர்ப்பவர்கள்.
- மிகச்சரியாக ஜகாத்தை நிறைவேற்றுபவர்கள்.
- தம் கற்பைப் பேணிக்கொள்பவர்கள்.
- தங்களுடைய மனைவி மற்றும் வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்ட அடிமையல்லாத வேறு யாரிடமும் தவறுக்கு செல்லாதவர்கள். நிச்சயமாக இவர்கள், பழிக்கப்படுபவர்கள் அல்ல.
- இவர்கள் (மனைவி, அடிமை) அல்லாது வேறு நபர்களை நாடினால் அவர்கள்தான் வரம்பு மீறியவர்கள்.
- தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட அமானிதத்தையும், வாக்குறுதியையும் பேணிக் காப்பவர்கள்.
- தொழுகையில் பேணுதலாக இருப்பவர்கள்.
- அவர்கள்தான் வாரிசுதாரர்கள்.
- சுவர்க்கத்தை வாரிசுரிமையாக பெற்றவர்கள். அதிலே நிரந்தரமாக இருப்பவர்கள்.

1. அல்லாஹ் அவர்களுக்கு மேலே ஏழு வானங்களை உருவாக்கினான். அவன் தமது படைப்பைக் குறித்து எப்பொழுதுமே அலட்சியமாக இருக்கவில்லை. (ஸூரா - அல்முஃமினூன்; பிரிவு: 1)

2. நூஹ் (அலை) மக்களை அல்லாஹ்வின்பால் அழைத்தார்கள். ஆனால் அம்மக்கள், தம்மைப்போல் ஒரு மனிதர் எவ்வாறு இறைத்தூதராக இருக்க முடியும் என்றும், தம் முன்னோர்களிடம் இது பற்றி கேள்விப்படவில்லை என்றும் கூறினர். மேலும் அவரை பைத்தியக்காரர் என்றழைத்தனர். (ஸூரா - அல்முஃமினூன்; பிரிவு: 2)

3. நூஹ் (அலை) உதவிக்காக அல்லாஹ்வை அழைத்தார்கள். அல்லாஹ் அவரிடம் தம் கண் முன் அவனுடைய அறிவிப்பின்படி ஒரு கப்பலைச் செய்யச் சொன்னான். (ஸூரா - அல்முஃமினூன்; பிரிவு: 2)

4. பின்னர் அவரையும், அவரை பின்பற்றுபவர்களை ஜோடி ஜோடியாக கப்பலில் ஏற்றி வெள்ளத்திலிருந்து காப்பாற்றினான். அநியாயம் செய்தவர்கள் வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டார்கள். நிச்சயமாக இவற்றில் பல அத்தாட்சிகள் இருக்கின்றன. அல்லாஹ் (இவ்வாறே மனிதர்களைச்) சோதிக்கிறான். (ஸூரா - அல்முஃமினூன்; பிரிவு: 2)

5. நூஹ்க்குப் பிறகு, வேறொரு தலைமுறையை (அதாவது ஆத் சமூகத்தினரை) உருவாக்கி, அவருடைய சகோதரர் ஹூத் (அலை) அவர்களை நபியாக அனுப்பினான். அந்த நபி அம்மக்களை அல்லாஹ்வின் பக்கம் அழைத்தார். (ஸூரா - அல்முஃமினூன்; பிரிவு: 2)

6. ஆனால் அம்மக்கள் தமது நபியை நிராகரித்தனர். அவர் தம்மை போன்று ஒரு மனிதர்தான் என்றும், அவர் பேச்சை கேட்டால் தமக்கு இழிவுதான் என்றும் கூறினர். மேலும் மறுமை நாளின் எச்சரிக்கைகளெல்லாம் சாத்தியமற்றது என்று சொல்லி அவரை புறக்கணித்தனர். (ஸூரா - அல்முஃமினூன்; பிரிவு: 3)

7. ஹூத் (அலை) அவர்கள் அல்லாஹ்விடம் துஆ செய்தார்கள். பேரிடி அம்மக்களைத் தாக்கியது. அவர்கள் குப்பைக் கூளங்களைப் போல ஆகிவிட்டனர். (ஸூரா - அல்முஃமினூன்; பிரிவு: 3)

8. தூதர்களே! தூய்மையானவற்றை உண்ணுங்கள். நற்செயல் செய்யுங்கள். நிச்சயமாக நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கு அறிபவன். உங்களுடைய இந்த சமுதாயம், ஒரே சமுதாயமாகும். அல்லாஹ்தான் உங்களின் இறைவன். அவனுக்கு அஞ்சி நடந்து கொள்ளுங்கள். (ஸூரா - அல்முஃமினூன்; பிரிவு: 4)

9. ஆனால், மக்கள் அதனை பல பிரிவுகளாக ஆக்கி விட்டனர். ஒவ்வொரு பிரிவினரும், தங்களிடம் இருப்பதைக் கொண்டே மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்கின்றனர். ஒரு குறிப்பிட்ட காலம் வரை அவர்களை அவர்களின் தவறான போக்கிலேயே விட்டுவிடுங்கள். (ஸூரா - அல்முஃமினூன்; பிரிவு: 4)

10. நாம் எந்த ஆத்மாவையும், அதன் சக்திக்கு மீறி சிரமப்படுத்துவதில்லை. (ஸூரா - அல்முஃமினூன்; பிரிவு: 4)

11. உண்மையை பேசும் ஒரு பதிவுப் புத்தகம் நம்மிடம் இருக்கிறது. அவர்கள் யாரும் அநீதி இழைக்கப்படமாட்டார்கள். (ஸூரா - அல்முஃமினூன்; பிரிவு: 4)

## தராவிஹ் - 14: (ரக்அத் 17 முதல் 20)

## ஸூரா - 23, அல்முஃமினூன்; வசனம்: 78 - 118; பிரிவு: 5 - 6

1. காஃபிர்களிடம் அல்லாஹ், மூன்று கேள்விகளை முன் வைக்கின்றான்.
   a. பூமி மற்றும் அதிலுள்ள அனைத்தும் யாருக்கு சொந்தம்?
   b. ஏழு வானங்கள், மகத்தான அர்ஷ் ஆகியவற்றின் இறைவன் யார்?
   c. எல்லாப் பொருட்களின் ஆட்சி அதிகாரம் யார் கையில் உள்ளது? அவன் இரட்சிப்பவன், இரட்சிக்கப்படமாட்டான். அவன் யார்?

2. **இந்த அனைத்து கேள்விகளுக்கும் அவர்கள், "அல்லாஹ்" என்று பதிலளிப்பர். அவ்வாறாயின் அவர்கள் எவ்வாறு ஏமாற்றப்படுகிறார்கள்? (ஸூரா - அல்முஃமினூன்; பிரிவு: 5)**

3. **அல்லாஹ், தனக்கு எந்தவொரு மகனையும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை. அவனைத் தவிர வேறு இறைவன் யாரும் இல்லை. (ஸூரா - அல்முஃமினூன்; பிரிவு: 5)**

4. **அப்படி இருந்தால் ஒவ்வொரு கடவுளும், தான் படைத்ததை மட்டுமே கவனிப்பர். மேலும் மற்றவர்களின் படைப்புகளில் அதிகாரம் செலுத்த முயற்சிப்பர். இவ்வாறெல்லாம் வர்ணிப்பதை விட்டும் அல்லாஹ் மிகவும் தூயவன். (ஸூரா - அல்முஃமினூன்; பிரிவு: 5)**

5. **நபியே! நீர் இவ்வாறு பிரார்த்தனை செய்வீராக! "என் இறைவா! ஷைத்தானுடைய தீண்டுதலை விட்டும் உன்னிடம் பாதுகாவல் தேடுகின்றேன். அவை என்னிடம் நெருங்காமலிருக்க எனக்கு துணைபுரிவாயாக!" (ஸூரா - அல்முஃமினூன்; பிரிவு: 6)**

6. **ஸூர் (எக்காளம்) ஊதப்படும் நாளில் எவருடைய (நன்மையின்) எடைகள் கனமாக இருக்கின்றனவோ அவர்களே வெற்றியாளர்கள். ஆனால், எவருடைய (நன்மையின்) எடைகள் இலேசாக இருக்கின்றனவோ, அவர்கள் தங்களுக்கு நஷ்டத்தை ஏற்படுத்திக் கொண்டவர்கள். அவர்கள் நரகத்தில் நிரந்தரமாக இருப்பர். (ஸூரா - அல்முஃமினூன்; பிரிவு: 6)**

7. **நரக நெருப்பு அவர்களுடைய முகங்களை கரிக்கும். அதில் அவர்கள் உதடு சுருண்டு விகாரமாக இருப்பார்கள். (ஸூரா - அல்முஃமினூன்; பிரிவு: 6)**

8. நரகவாசிகள் கூக்குரலிடுவார்கள். “இறைவா! எங்களை இங்கிருந்து வெளியேற்றுவாயாக! மீண்டும் நாங்கள் பாவங்களின் பக்கம் திரும்பினால் நிச்சயமாக நாங்கள் அநியாயக்காரர்களாக ஆகிவிடுவோம்”. (ஸூரா - அல்முஃமினூன்; பிரிவு: 6)

9. அதற்கு அல்லாஹ், “அதிலேயே கிடந்து நீங்கள் சிறுமை அடையுங்கள். என்னுடன் பேசாதீர்கள்!” என்று கூறுவான். மேலும், தன்னுடைய அடியார்கள், “எங்கள் இறைவா! நாங்கள் உன் மீது ஈமான் கொள்கிறோம். நீ எங்கள் குற்றங்களை மன்னித்து, எங்கள் மீது கிருபை செய்வாயாக! கிருபையாளர்களுக்கெல்லாம் நீ மிகவும் மேலானவன்” என்று பிரார்த்தனை செய்து கொண்டிருந்தனர். அப்போது அவர்களை நீங்கள் பரிகாசம் செய்தீர்கள்”, என அல்லாஹ் கூறுவான். (ஸூரா - அல்முஃமினூன்; பிரிவு: 6)

10. “இன்னும் என் நினைவு உங்களுக்கு மறக்கும் வரையில் அவர்களைப் பற்றி நீங்கள் ஏளனமாக நகைத்துக் கொண்டும் இருந்தீர்கள். நிச்சயமாக, அவர்கள் பொறுமையாய் இருந்ததற்காக இன்று நான் அவர்களுக்கு நற்கூலியை வழங்கினேன். நிச்சயமாக அவர்களே வெற்றியாளர்கள்!”, என அல்லாஹ் கூறுவான். (ஸூரா - அல்முஃமினூன்; பிரிவு: 6)

11. “இறைவா! என்னை மன்னித்து என்மேல் கிருபை செய்வாயாக! நீதான் கிருபை செய்பவர்களில் மிகச்சிறந்தவன்” என்று நபியே நீர் கூறுவீராக! (ஸூரா - அல்முஃமினூன்; பிரிவு: 6)

## ஸூரா - 24, அந்நூர்; வசனம்: 1 - 20; பிரிவு: 1 - 2

12. இந்த ஸூராவை அல்லாஹ் இறக்கி வைத்தான். மேலும் இதிலுள்ள சட்டத்தை கடமையாகவும் ஆக்கினான். (ஸூரா - அந்நூர்; பிரிவு: 1)

13. **விபச்சாரம் செய்கின்ற ஆண், விபச்சாரம் செய்கின்ற பெண், அவர்களில் ஒவ்வொருவருக்கும் 100 சாட்டையடி கொடுங்கள். அல்லாஹ்வின் சட்டத்தை நிறைவேற்றுவதில் இரக்கம் காட்டவேண்டாம். (ஸூரா - அந்நூர்; பிரிவு: 1)**

14. **விபச்சாரம் செய்த ஆண், விபச்சாரம் செய்த பெண்ணை அல்லது இணைவைக்கின்ற பெண்ணைத்தான் திருமணம் செய்து கொள்வான். இது விபச்சாரம் செய்கின்ற பெண்ணுக்கும் பொருந்தும். இந்த திருமணங்கள் இறைநம்பிக்கையாளர்களுக்கு தடை செய்யப்பட்டுள்ளது. (விபச்சாரம் செய்தவர்கள் அல்லாஹ்விடம் மன்னிப்பு கேட்டு திருந்தாதவரை, அவர்களை திருமணம் செய்ய இஸ்லாம் தடை விதித்துள்ளது). (ஸூரா - அந்நூர்; பிரிவு: 1)**

15. **எவர்கள் கற்புள்ள பெண்கள் மீது அவதூறு கூறி (அதை நிரூபிக்க) நான்கு சாட்சிகளைக் கொண்டு வரவில்லையோ, அவர்களை நீங்கள் எண்பது கசையடி அடியுங்கள்; பின்னர் அவர்களது சாட்சியத்தை எக்காலத்திலும் ஏற்றுக் கொள்ளாதீர்கள். நிச்சயமாக அவர்கள்தான் தீயவர்கள். (ஸூரா - அந்நூர்; பிரிவு: 1)**

16. **எவர்கள் தம் மனைவிமார்களை அவதூறு கூறி (அதை நிரூபிக்கத்) தங்களையன்றி அவர்களிடம் வேறு சாட்சிகள் இல்லாமலிருந்தால் அவன், நிச்சயமாக தாம் உண்மையே கூறுவதாக அல்லாஹ்வின்மீது நான்கு முறை சத்தியம் செய்து கூறி: ஐந்தாவது முறை, "(இதில்) தான் பொய் சொல்வதாக இருந்தால், நிச்சயமாக அல்லாஹ்வுடைய சாபம் தன்மீது உண்டாகட்டும்" என்றும் (அவன் கூற வேண்டும்). (ஸூரா - அந்நூர்; பிரிவு: 1)**

17. **இன்னும் (அவனுடைய மனைவி குற்றத்தை மறுத்து) தன் மீதுள்ள தண்டனையை விலக்க, "நிச்சயமாக அவன் பொய்யர்களில் நின்றுமுள்ளவன்" என்று அல்லாஹ்வின் மீது**

சத்தியம் செய்து நான்கு முறை கூறி: ஐந்தாவது முறை, “அவன் உண்மையாளர்களிலுள்ளவனானால் நிச்சயமாக அல்லாஹ்வுடைய கோபம் தன்மீது உண்டாவதாக என்றும் (அவள் கூற வேண்டும்). (ஸூரா - அந்நூர்; பிரிவு: 1)

18. ஆயிஷா (ரலி) அவர்களுக்கெதிராக அவதூறு பரப்பப்பட்ட நிகழ்வு ஒரு தீய விஷயம் மட்டும் அல்லாமல், முஸ்லிம்களுக்கு ஒரு பாடமாகவும் இருக்கிறது. (ஹிஜ்ரி 6ம் ஆண்டு ஒரு பயணத்தில் நபி (ஸல்) அவர்களுடன் ஆயிஷா (ரலி) அவர்களும் உடன் சென்றார்கள். ஓர் இரவு படை ஓரிடத்தில் முகாமிட்டிருந்தது. ஆயிஷா (ரலி) தன் சுய தேவைக்காக சென்றிருந்த போது அவரின் முத்துமாலை தொலைந்து விட்டது. அதை தேடி எடுத்து வருவதற்குள் படை புறப்பட்டு சென்றுவிட்டது. வேறு வழியின்றி அவர்கள் அங்கேயே காத்திருந்தபோது, கடைசியாக வந்த நபித் தோழர் ஒருவர் அவரை அடையாளம் கண்டு கண்ணியத்துடன் தனது ஒட்டகத்தின் மூலம் அவர்களை மதீனா கொண்டுவந்து சேர்த்தார். இந்த சாதாரண நிகழ்ச்சியை திரித்து மதீனாவிலிருந்த சில நயவஞ்சகர்கள் அவதூறு கற்பித்தனர். இதைப் பற்றி கீழ்காணும் வசனங்கள் குறிப்பிடுகின்றன). (ஸூரா - அந்நூர்; பிரிவு: 2)

19. அவர்களில் ஒவ்வொருவரும் செய்த பாவத்துக்கு தண்டனையுண்டு. யார் அதில் பெரும் பங்கு வகித்தானோ, அவனுக்குப் பெரும் தண்டனையுண்டு. (ஸூரா - அந்நூர்; பிரிவு: 2)

20. மக்களே! நீங்கள் இதனை சாதாரணமாக எடுத்துக் கொண்டீர்கள். ஆனால் அல்லாஹ்வின் பார்வையில் இது மிகக் கடினமான தண்டனைக்குரிய குற்றமாகும். (ஸூரா - அந்நூர்; பிரிவு: 2)

21. **நீங்கள் உண்மையான முஃமினாக இருந்தால் இது போன்ற காரியத்தை இனி ஒருபோதும் செய்து விடாதீர்கள், என்று அல்லாஹ், உங்களுக்கு உபதேசம் செய்கின்றான்.** (ஸூரா - அந்நூர்; பிரிவு: 2)

22. **இறைநம்பிக்கை கொண்டோரைப் பற்றி இத்தகைய மானக்கேடான விஷயங்கள் பரவ வேண்டுமென யார் விரும்புகிறார்களோ, அவர்களுக்கு நிச்சயமாக இம்மையிலும், மறுமையிலும் நோவினை தரும் வேதனையுண்டு. அல்லாஹ் யாவற்றையும் அறிகிறான். நீங்கள் அறியமாட்டீர்கள்.** (ஸூரா - அந்நூர்; பிரிவு: 2)

----------------------------------------